1972 மார்ச் 10]

துணைச் செவிலியர்களுக்குச் சென்றிருக்கிறார் கனம் அங்கத்தினர். அதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதிலளிக்கப்படும்.

திரு. கே. ஆர். கிருஷ்ணன்: தலைவரவர்களே, செவிலியர், பயிற்சிக்கு வருபவர்களில் ஏழை மக்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் அளிக்கப்படும் உதவித் தொகை போதாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களின் பரிதாப நிலைமை அறிந்து, பயிற்சிக் காலத்தில் அளிக்கப்படும் உதவித் தொகையை அதிகரிக்க அரசு ஆலோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அவர்களுடைய பரிதாபத்தை உணர்ந்துதான் உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இல்லையென்றால் உதவித் தொகை அளிக்க இடமில்லை. உதவித் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்பது அரசின் நிதிநிலை வசதிகளைப் பொறுத்தது.

திரு. என். கணபதி: தலைவரவர்களே, செவிலியர்கள் அரசாங்க அலுவலர்களைத் திருமணம் செய்துக் கொண்டால்தான் கணவன், மனைவி இருவரும் சேர்ந்து ஒரே இடத்தில் பணிபுரிந்து, குடும்பம் நடத்தக்கூடிய வசதி இருக்கிறது. அரசாங்க அலுவலர்களை கணவராகப் பெறாமலிருந்தால், இந்த வசதி இல்லாமல் கணவன், மனைவி பிரிந்து இருந்து குடும்பம் நடத்தி துன்பபடுகிறார்கள். எனவே, அவர்களுக்கும் இந்தச் சலுகை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, செவிலியர்களின் கணவன்மார்களைப்பற்றி ஆராய்வதில்லை.

பெருநாளிக்குப் பதிவு அலுவலகம்

*** 410 வினா—திரு. எஸ். காதர்பாஷா என்ற வெள்ளைச்சாமி:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், பெருநாளி என்னும் ஊரில் புதிய பதிவு அலுவலகம் ஏற்படுத்தும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் என்றால், எப்போது செயல்படும்?